உ

கற்பகவிநாயகர்துணை.

ரெங்கூன்பர்மாடாப்பு

# நொண்டிச்சிந்து.

இஃது

மதுரைஜில்லா கண்டனூரைச் சேர்ந்த பாலையூர்

விநாயகர் கடாக்ஷ வித்துவான்

**சி. இராமசாமி ஐயங்காரவர்கள்**

இயற்றியதை

பாலையூர் ஆ. சு. உ.

**சுப்பிரமணியஞ்செட்டியார்**

விருப்பத்தின்படி

மதுரை வடக்குமாசிவீதி

வி. என்.

**இராகவக்கோனார்**

அவர்களால்

மதுரை: ஸ்ரீ ராமச்சந்திரவிலாச அச்சியந்திரசாலையிற்,

பதிப்பிக்கப்பெற்றது.

1908.



உ

கற்பகவிநாயகர் துணை.

# ரெங்கூன் பர்மா டாப்பு

# நொண்டிச்சிந்து.

## விநாயகர் துதிவெண்பா.

சீர்வளர் பர்மாநாட்டின் சிந்துதனைச் செந்தமிழால்
யேர்வளரப் பூவி லிசைக்கவே—வார்வளர்ந்த
கொங்கையுமை தந்தமத குஞ்சர முகன்றனருள்
தங்குபத நன்குதுணை தான்.

## சிந்து.

தெந்தின தின தினனு தெந்தின தின தினனு.

பாண்டியநாடுதனில் நாங்களும்
பத்தினிமார் பிள்ளையுடன் சுகித்திருந்தோம்
பொருள்மிகத் தேடவென்று எங்கள்
புத்திரர் பெண்டிரைவிட்டு சுத்தபிர்மம்போல்
மறையவர் தனையழைத்து நாட்பார்த்து
மறுதேசம்புறப்பிட எத்தனஞ்செய்தோம்.
அப்படியிருக்கும்போது எங்களை
அன்பாகக்கூப்பிட்டார் சம்புத்துடையார்
அதற்குமேசம்மதித்து நாங்களும்
ஆளுக்குத்தகுந்தபடி சம்பளம்பேசி
முடித்துமுன்பார்த்தநாளில் எங்களை
முதலாளிமார்கள்வந்து பயனஞ்செய்தார்
சகுனங்கள்தான்பார்த்தோம் நல்ல
சகுனங்களானதினால் மதுரைவந்து
யிறங்கியிருந்தோமன்று சுவாமிக்கு
ஏராளமாய்ப்பழந் தேங்காய்வாங்கி
அர்ச்சகர்தனையழைத்து சுவாமிக்கு
அர்ச்சனைகள்செய்துமிகப் பணிந்துநின்றோம்
விபூதிபிரசாதம் தந்து
வேண்டியபாக்கியமுடன் வருவீரென்று

கடவுளைப்போலேசொன்ன அர்ச்சகற்கு
காணிக்கையாகவேதான் வேணதளித்து
மறுநாள்க்காலேதனில் நாங்களும்
மதுராஸ்தன்னிற் சென்றிறங்கி
ஜவுளிப்பிடவைகளும் நன்றாய்
சவுக்கியமாகவே வாங்கிக்கட்டி
இன்னஞ்சிலசாமான் வேண்டிய
தெல்லாமொழுங்காகச் சேகரித்து
கப்பலில்போயேறி அஞ்சாநாள்
கண்டோம்இரங்கோன் துறைமுகத்தை
எதிர்கொண்டுவந்தார்கள் யெங்கள்
இனமானபந்துக்களும் சொந்தக்காரரும்
அவர்களுடன்கூடி யோகக்ஷேமம்
அன்பாகவிசாரித்து சந்தோஷத்துடன்
கப்பலைவிட்டிரங்கி அவர்களுடன்
கரைதனில்ச்சென்றுமே காடியிலேறி
வீட்டினிற்போய்ச்சேர்ந்து சற்றிருந்து
வென்னீருபோடச்சொல்லி ஸ்நானங்கள்செய்தோம்
மடிகள்தரித்துக்கொண்டோம் மேல்வீட்டில்
மயில்வாகனக்கடவுள்தனைப் பணிந்தோம்
போஜனச்சாலையிற்போய் அறுசுவைப்
போஜனங்கள்செய்துமே கையலம்பி
தாம்பூலந்தனையணிந்து பாய்விரித்து
சற்றிளைப்பாறவே நித்திரைசெய்தோம்
மாலைப்பொழுதிலெழுந்தோம் யெங்கள்
வணிகர்குலதெய்வத்தைப் பணியவென்று
பசுமந்தான்தன்னிலேபோய் யெங்கள்
பரமகுருபரனைப் போற்றிசெய்தோம்
கற்பூரதீபம்பார்த்து முருகனுக்கு
காணிக்கைப்போட்டு விபூதிவாங்கி
தரித்தோம்வினைதீர ஹரஹர
சாம்பசிவாவென்று தான்பணிந்து
போய்ச்சேர்ந்தோம்நாட்டுப்புறம் கடைவைத்த
புதிதாய்வீடுகளும் தானமர்த்தி

வைத்தோம்கடைதனையும் அதுமுதல்
வாங்கல்கொடுக்கல்களும் நடத்திவந்தோம்
விருமாவிளப்பமென்ன கேட்க
வேடிக்கையாயிருக்குஞ் சொல்லுகிறேன்
பெண்காணியானதேசம் அந்தப்
பெண்டுகள்சொற்கேளாவிடில் சண்டைகள்வரும்
யாபாரஞ்செய்வதும்பெண் அவர்க
ளாண்பிள்ளைமார்களால் ஒன்றுமில்லை
அழகிற்சிறந்தவர்கள் அவர்களும்
ஆற்றிலேஇரண்டுமூன்று தரங்குளிப்பார்
சணக்காதனைப்பூசுவார் இரண்டு
சட்டையும்போடுவார் ஒன்றுமேலொன்றாய்
சீவிமயிர்முடிப்பார் நல்ல
சிகப்புச்சவுக்கங்களும் அணிந்துகொண்டு
அரையிலேலொங்கிகட்டி குடைபிடித்
தாண்பிள்ளைகள்போலக்கை வீசிநடப்பார்
நத்தாவும்பத்திகளும் மோதிரம்
நக்கானும்காப்புகளும் அணிந்துக்கொண்டு
சீஞ்சுலவைச்சீப்புகளும் நல்ல
ஜீனுப்பூச்செண்டுகளும் தான்முடித்து
தோப்பியாங்கொடியுடனே நாய்ச்சோவு
துடுக்காய்அணிந்துமே மினுக்கிடுவார்
நாணப்படமாட்டார் பார்க்க
நடனஞ்செய்தாசிகள்போல் நடிப்பார்
காந்தர்வமணஞ்செய்து கூடிக்
கலந்திடலாமென்ற தானினைத்தால்
மங்கைப்பருவமுள்ள பெண்கள்
வருவார்கள்கோடான கோடியாக
வகைசொல்லமுடியாது அவர்களை
வாண்டாமென்றாலும்விட்டுப் போகவேமாட்டார்
எந்தநேரமுங்கலவி செய்ய
யிணங்காவிடிற்கன வம்புகள்செய்வார்
மதப்பயல்குடியிருக்கும் பர்மா
மாதரைஅடுத்தவர்கள் ஆண்டியாய்ப்போவார்

பெலமெல்லாம்வாங்கிக்கொள்வார் நம்மளேயும்
பெண்டுகள்பிள்ளைகளுடன் போகவும்விடார்
ஒருபிள்ளைப்பெறும்வரையில் அந்த
ஓதியர்கள்மேல்மயக்கம் யாருக்குமுண்டு
ஒருபிள்ளை தான்பெற்றால் அப்புறம்
ஓணுய்கள்போலவே திரிந்திடுவார்
பிள்ளைக்குறைவுமில்லை அவர்களும்
புருஷனைமதிப்பாக யெண்ணவேமாட்டார்
ஆனதால்சொன்னேனிதை புத்திமான்கள்
ஆராய்ந்துப்பார்த்தாக்கால் தெரியும்நன்றாய்
நெல்வட்டிகடன்வாங்குவார் செய்தொழில்
நிறைவாகவேமிச்சந்தான் கிடைத்தால்
வட்டியுடன்முதல்தருவார் இல்லாவிடில்
வாங்கினகடன்கொடாமல் ஓடியேபோவார்
தேடிப்பிடிப்போமென்றால் கடனீய்ந்தோர்
திரிந்தலைந்தாலுமகப்பட மாட்டார்
ஒருக்காற்கண்டுகேட்டால் கத்தியால்
ஓங்கியேவெட்டுவார் பனங்காயைப்போல்
பகையென்பதாகாது பர்மாவில்
பகைத்தவர்ஆவிக ளகன்றுவிடும்
மடப்பயஜாதிகாளாம் அறிவுள்ள
மனிதனைக்கொல்லுவதில் லெக்ஷியமில்லை
ஆடுமாடுகள்போல் அவர்கள்
அஞ்சவேமாட்டாரறிவு கெட்டோர்
மூடப்பயல்ஜாதி ரெம்ப
முரட்டுத்தனங்களாய்த் திரிந்திடுவார்
வசையில்லாச்சேதிசொல்ல அவர்கட்கு
வாராதுவாயினில் என்னாளும்
நப்பிகள்தின்றிடுவார் நாத்தமுள்ள
நப்பியாம்ஊந்தண்ணீ தான்குடிப்பார்
வேம்புசுரைபறங்கி காஞ்சிரை
வெருகுபுளிபாகை மாங்கொழுந்து
மூங்கிக்கிழங்குகளும் நல்ல
மொச்சைதட்டப்பயறு முளையுடனே

மாட்டுக்கறிகளுடன் கெட்ட
மனைபன்றிகுதிரையின் கறிகளுமே
பாம்புதவளைகளும் கூனி
பத்துக்காலுள்ளதோர் நண்டுடனே
இன்னஞ்சிலசாமான் இவர்கள்
எக்களிப்பாகவே தின்றிடுவார்
இப்படிமனிதருமுண்டோ இவர்களை
என்னவென்றுதான்சொல்ல மனதுவரும்
அவர்களிடந்தனிலே பணங்கொடுத்து
அஞ்சுகால்வட்டி முதல்வாங்க
படவுகள்தனிலேறி போர
பாதையிலடித்தாலுங் கேள்வியுண்டோ
அலைகளதிகமானல் படவுடன்
ஆற்றுக்குள்முங்கியே பிழைக்கவேணும்
காற்றேயடிக்கவேணும் இல்லாவிடில்
கனவம்புபண்ணுவான் சுக்கான்காரன்
எதிர்த்தண்ணியாயிருந்தால் அப்போது
எய்யாதடிக்கவேணும் கைசிவக்க
கைப்பொங்கல்பொங்கவேணும் இல்லாவிடில்
காயவேணும்போனவர்கள் காடுதனிலே
உப்புடன்புளியிருந்தால் வரமிளகாய்
ஒருநாளுமகப்பட மாட்டாதங்கே
கையிலேகொண்டுபோனல் அதனைக்
காச்சிக்குடிக்கநல்ல யிடமுமில்லை
எட்டுநாள்கிடந்தாலும் எங்களை
ஏனென்றுகேட்க மணிதரில்லை
பெற்ருர்பிறந்தாரில்லை யெங்களைப்
பெருமாள்மருகனெனும் முருகன்காப்பார்
வணிகர்குலத்துதித்து சம்பளத்துக்கு
வந்ததினலிப்படித் திரிந்தலைந்தோம்
இரவுபகலுமின்றி நேரம்
இன்னதென்றுமில்லாமல்ப் போகவேணும்
பணத்துடஆசையினல் நாமளும்
பட்டப்பாடுகள்போதும் தலைமுனாக்கி

இணங்களிற்கொடுத்ததெல்லாம் புதுக்கணக
கேஜண்டுமனம்போலே எழுதிவிட்டு
பாக்கியுள்ள இனங்களிலே கோர்ட்டில்
பிராதுசெய்து சமன்களும் தான் செலுத்தி
வராத இனங்களிலே கோர்ட்டில்
வாரண்டுகிளப்பியே சொத்தைப்பிடித்து
ஏலங்கள் தான்போட்டு பணத்தை
யிதமாகவாங்கியே கொடுத்துவிட்டு
சம்பளச்சீட்டுபடி வருஷமூன்றுந்
தானிருந்துவேலைகளும் பார்த்துவிட்டு
சம்பளச்சாமானும் வழிச்செலவுந்
தானுமேவாங்கியே இரங்கோன் வந்து
கப்பலிற்போயேறி ஐந்துநாளும்
கவலையுந்துன்பமும் மிகவடைந்து
மதராசு தனிலிறங்கி அங்கு
மனதிற்களிப்படைந்து போஜனஞ்செய்து
வேண்டியசாமானும் நாங்கள்
விதவிதமாய்வாங்கிப் பொட்டிபோட்டு
ரயில்தனிலேற்றிக்கொண்டு நாங்களும்
நன்றாகவரந்தாங்கி வந்துசேர்ந்தோம்
வண்டிகள் தான்பிடித்தோம் பெரியகோட்டை
மார்க்கமாய்முதலாளி வீடுசென்று
காசுப்பைக்கணக்குகளும் ஐந்துகையுங்
கட்டிஅவர்களிடம் ஒப்பித்துவிட்டு
சம்பளச்சீட்டுவாங்கி அவர்கள்வீட்டிற்
சாப்பிட்டுச்சொல்லிக்கொண்டு வண்டியிலேறி
பிழைத்தோம்பிழைத்தோமென்று யெங்கள்
பெண்டாட்டிபிள்ளைமுன்வந்து சேர்ந்தோம்
ஐங்கரன்பதம்வாழி சத்தியுமை
யரியயன்னொளிர் பரசிவம்வாழி
செங்கரமயில்தாங்கு மயிலேறு
சேவகன்வள்ளிதெய்வானை வாழி
அருமறைகலைவாழி வேதிய
ரரசர்வைசியர்பின்னவர் வாழி
திருமாமகள்வாழி கலைபொழியுந்
தேவியினொடுபூதலம் வாழி
அன்னஞ்சூழும்பாலையூர் அன்பன்
அருமறைஇராமசாமி சொல்வாழி.

முற்றிற்று.